IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 53/2024

**P.W.1**

| | |
|---|---|
| Name | : கமலநாராயணன் |
| Father/Husband Name | : |
| Place | : |
| Calling | : |
| Age | : 57 |
| Date | : 15-04-2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

2. நான் 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எங்களுக்கு சொந்தமான இடத்தை அவர்களுடையது என்று உரிமை கோருகிறார்கள். அதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய சொத்து என்றுதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிலுரையை

படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்து அவர்களுக்கு சொந்தமானது என்று தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதிகள் என்னுடைய சொத்தின் உரிமை மூலத்தை மறுத்தப்பிறகும் நான் வழக்கின் பரிகாரத்தை திருத்த மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் என் அப்பா தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

4. என் அப்பா தாவா சொத்துக்களில் எவ்வளவு செண்டுக்களை கிரையம் பெற்றார் என்றால் 48 செண்ட் கிரையம் பெற்றார். அதன் புல எண் என்னவென்றால் 146/1. அந்த புல எண்ணிற்கு உட்பட்ட 48 செண்ட் நிலத்தில் பிரதிவாதிகள் உள்ளே வர முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். மீதமுள்ள 1 ஏக்கர் 34 செண்ட் இடம் என் அப்பாவிற்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். 01.01.1933 தேதியிட்ட ஆவணம் என் அப்பா பெயரில் இல்லை என்றால் சரிதான்.

5. 1 ஏக்கர் 34 செண்ட் நிலம் என் அப்பாவின் அனுபவத்தில் இருந்ததற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 ஏக்கர் 34 செண்ட் நிலத்தில் என் தாத்தாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் தாத்தா தேவராஜ் நாயுடு 1.34 ஏக்கர் நிலத்தை அனுபவித்ததற்கு வரி ரசீதை கூட நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாத்தா 1 ஏக்கர்

34 செண்டை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் எழுதி வைத்து சென்றுள்ளாரா என்றால் இல்லை. 1 ஏக்கர் 34 செண்ட் நிலம் என் அப்பா பெயரில் உள்ளதற்கான உரிமை மூல ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

6. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.9/புகார் ஏற்பு ரசீதிற்கான புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் வா.சா.ஆ.1/உயில் அவணத்திற்கு பிறகு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். உண்மையில் என் தாத்தா மற்றும் என் அப்பா ஆகியோருக்கு 1.34 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்ததிருந்தால் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னிடம் கொடுத்துவிட்டு சென்று இருப்பார்கள் என்றாலும், அது அவர்களுக்கு சொந்தமில்லாதது என்பதால் நான் உயில் ஆவணத்தை தன்னிச்சையாக உருவாக்கி அதன் பின்னிட்டு வழக்கு ஆவணங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா எனக்கும், என் தம்பிக்கும் உயில் ஆவணம் எழுதி வைத்ததாக சொல்லப்படுவதற்கு பிறகு என் அம்மா மற்றும் சகோதரிகள் எனக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க தேவையே ஏற்படவில்லை எனும்போது, உயில் ஆவணம் என்னால் ஏற்படுத்தப்பட்டது என்பதை தெளிவுப்படுத்துகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் பிரதிவாதிகள் தான் 1.34 ஏக்கருக்கு சொந்தகாரர்கள் என்று சொல்லியுள்ள நிலையில், நான் எனது வழக்குரை

பரிகாரத்தில் எவ்வித திருத்தமும் செய்யாத வரைக்கும் இவ்வழக்கு நிலைக்கத்தகது அல்ல என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு வழக்கிறஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்குரையிலும் பிரதிவாதிகளுக்கு உரிய முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு, வழக்கு தாக்கல் செய்ய முடியவில்லை என்ற அவசர நிலையை குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வழக்கில் போதிய முகாந்திரம் இல்லை என்றாலும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.